சுபீட்சம்

SUPEEDSAM

EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள

www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 03.09.2024

supeedsam.com

supeedsam@gmail.com

# தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியீடு!



தழிழ்ப்பொது வேட்பாளாின்தோ்தல் விஞ்ஞாபனம் இன்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படும் எனத் தொிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு வவுனியாவில் நேற்று நிறைவேற்றிய தீர்மானத்தை ஒற்றுமையாக இணைந்து நடைமுறைப்படுத்துவோம் என அக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்றையதினம் திங்கட்கிழமை நடைபெற்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் நினைவேந்தலில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

மேலும் சுகவீனம் காரணமாக நேற்றையதினம் வவுனியாவில் நடைபெற்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியவில்லை என்றும், ஆனாலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி மத்திய செயற்குழு எடுத்த தீர்மானத்தை ஒற்றுமையாக இணைந்து நடைமுறைப்படுத்துவோம் எனவும் அவா் தொிவித்தார்.

## தமிழரசு கட்சியின் மத்திய குழு தீர்மானத்தை ஏற்க முடியாது

### சிறீதரன் காட்டம்



ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்றுமுன்தினம் தீர்மானித்தது.

இந்நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு மேற்கொண்ட தீர்மானத்துக்கான எதிர்வினையை எதிர்வரும் நாட்களில் வெளிப்படுத்த விருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## சஜித்திற்கு ஆதரவு; சுமந்திரன் எடுத்த முடிவு செல்லுபடியற்றதா?

### தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவுக்குள் பிளவு



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு முடிவு செய்துள்ளது.

எனினும், தீர்மானம் எடுக்கப்பட்டபோது மத்திய குழுவில் 18 பேர் மாத்திரமே சமூகளமளித்திருந்ததாக கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா நேற்று இரவு ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இதனால் தமிழ் பொதுவேட்பாளராக களமிறங்கியுள்ள பா.அரியநேத்திரன் போட்டியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கையும் செல்லுபடியற்றது எனவும் மாவை சேனாதிராஜா கூறியிருக்கிறார்.

02 ஆம் பக்கத்தில்...

## மத்திய குழு தீர்மானத்தை நியாயப்படுத்தும் தமிழரசு கட்சி

### பொது செயலாளர் விளக்கம்



தமிழரசுக் கட்சி மத்திய குழுத் தீர்மானம் என்பது கூட்டு தீர்மான் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சஜித் பிரேமதாசவிற்கு ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதாக கட்சியின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கை தமிழரசுக் கட்சிக்கு நன்றி தெரிவித்த சஜித் பிரேமதாச!



எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் இலங்கை தமிழரசு கட்சி சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்துள்ள நிலையில் சஜித் பிரேமதாச தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் நேற்றைய முன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது. இதன்போது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்குவதாக மத்திய குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் தீர்மானம் தொடர்பில் சஜித் பிமேதாச அவரது எக்ஸ் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார். குறித்த பதிவில் அனைவரும் வெற்றிபெறும் எதிர்காலத்தை உருவாக்குவோம் என்றும் இனவெறி, பாகுபாடு இல்லாத எதிர்காலத்தை உருவாக்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ரணில் சஜித்தை இணைக்க முயற்சி



ஜனாதிபதியினதும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரினதும் இரண்டாம் நிலை தலைவர்கள் இருவரையும் இணைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்துள்ள சாதகமான நிலையை மாற்றியமைப்பதற்காக ஜனாதிபதியினதும் எதிர்கட்சி

02 ஆம் பக்கத்தில்...

## கட்சி ஆதரவு தெரிவித்தாலும் நான் மேடைகளில் பங்குபற்ற மாட்டேன்

இலங்கை தமிழரசு கட்சி ஆதரவு தெரிவித்தாலும் நான் மேடைகளில் பங்குபற்ற மாட்டேன், எனது முடிவை மக்கள் தீர்மானிக்க வேண்டும் என இலங்கை தமிழரசு கட்சியின் தூணைத்தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவருமான சீவிகே சிவஞானம் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

# ஜெனீவாவிலிருந்து வரும் அச்சுறுத்தலை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றீர்கள்?

## ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென ஜகத்டயஸ் வேண்டுகோள்

ஜெனீவாவின் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் மூலம் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை எவ்வாறு எதிர் கொள்ளப்போகின்றார்கள் என்பதை ஜனாதிபதி வேட்பாளர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் ஜகத் டயஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆதாரமற்ற யுத்த குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து யுத்தத்தில் வெற்றிபெற்ற இராணுவத்தினரை இலங்கை அரசாங்கம் தண்டிக்கவேண்டும் என அழுத்தம் கொடுக்கும் மனித உரிமை பேரவையை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்கள் என்பது குறித்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது நிலைப்பாடுகளை முன்வைக்கவேண்டு;ம் என அவர் தெரிவித்துள்ளார்.



ஜெனீவாவின் சமீபத்தைய அறிக்கையை சுட்டிக்காட்டியுள்ள ஜகத்டயஸ் இந்த கடும் சவாலை எதிர்கொள்வதில் அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி வேட்பாளர்களிற்கும் உள்ள பொறுப்பை வலியுறுத்தியுள்ளார்.

யுத்தகுற்றங்களில் ஈடுபட்டவர்கள் என தான் குற்றம்சாட்டியவர்களை விசாரணைகளிற்கு உட்படுத்தி தண்டிப்பதற்கு இலங்கை தவறிவிட்டதாக குற்றம்சாட்டும் ஜெனீவா வெளிப்புற உலகளாவிய நியாயாதிக்கத்தை பயன்படுத்துதல், நம்பகதன்மை மிக்க விதத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்களிற்கு எதிராக பொருளாதார தடைகள் பயணத்தடைகளை விதித்தல், சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் பிற நடவடிக்கைகள் போன்ற தந்திரோபாயங்களை சர்வதேச சமூகம் பின்பற்றவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது என ஜகத்டயஸ் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி வட, கிழக்கு இளைஞர்கள் அதிகாரப் பகிர்வு விடயத்துக்கே முக்கியத்துவம் கொடுப்பார்கள்

வட, கிழக்கு இளைஞர்கள் அதிகாரப் பகிர்வு என்ற விடயத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள் இந்த ஜனாதிபதி தேர்தலிலும் வட கிழக்கு இளைஞர்கள் இவற்றை முன்னுரிமைப் படுத்துவார்கள் என இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. யான இரா.சாணக்கியன் தெரிவித்தார்.





கொழும்பு மற்றும் காலியில் இடம்பெற்ற Cross Party Youth Dialogue பல் கட்சி இளைஞர் உரையாடல் என்னும் தொனிப்பொருளிலான கூட்டத்திலேயே இரா.சாணக்கியன் எம்.பி இவ்வாறு தெரிவித்தார்

இதில் பல கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள் இதில் அரசியலில் இளைஞர்களின் பங்களிப்பு தொடர்பில் ஆராயப்பட்டது. ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இதன்போதே பிரதானமாக நீண்டகாலமாக நிலவும் வட கிழக்கு மக்களுக்கான அதிகார பகிர்வுக்கான தேவை, பொறுப்புக் கூறல், காணி தொடர்பான பிரச்சினைகள் போன்ற காரணங்களுக்காக இளைஞர்கள் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் நாட்டை விட்டு வெளியேறும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. தெற்கில் உள்ள இளைஞர்கள் ஊழல்களினால் பாதிக்கப்பட்டிருப்பினும் அதற்கு முக்கியம் கொடுக்கும் அதே வேளை வட கிழக்கு இளைஞர்கள் அதிகாரப் பகிர்வு என்ற விடயத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள் இந்த ஜனாதிபதி தேர்விலும் வட கிழக்கு இளைஞர்கள் இவற்றை முன்னுரிமைப் படுத்துவார்கள் என்று சாணக்கியன் எம்.பி. தெரிவித்தார்

### ரணில் சஜித்தை இணைக்க முயற்சி

தலைவரினதும் பிரச்சார பிரிவில் இரண்டாம் நிலையில் உள்ள தலைவர்கள் இருவரையும இணைந்து செயற்பட செய்வது தொடர்பிலான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர் என அனுரகுமாரதிசநாயக்க ஹோமகவில் இடம்பெற்ற பிரச்சார கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சஜித்பிரேமதாசவிற்கும் இடையிலான மோதல்கள் தொடர்கின்ற அதேவேளை இரண்டு தரப்பினதும் இரண்டாம் நிலையை சேர்ந்தவர்கள் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை தடுக்க முயல்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் நிலையில்தலைவர்கள் மத்தியில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன,நாம் பிரிந்திருப்பது விவேகமானதா இல்லையா? நாம் ஒன்று கூடி தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை மாற்றியமைக்க ஏதாவது செய்ய முடியாத என அவர்கள் பேசிக்கொள்கின்றார்கள் என அனுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

### கட்சி ஆதரவு தெரிவித்தாலும் நான்...

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென இலங்கை தமிழ் அரசு கட்சி தீர்மானித்தமை மற்றும் இது தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் வெளிவருவது தொடர்பில் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்தியகுழு கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்றவர்களில் பலர் அந்த தீர்மானத்தை ஆதரித்தனர்.

பொதுவேட்பாளர் ஆதரவு நிலைப்பாட்டைக் கிளிநொச்சி கிளை சார்பில் த.குருகுலராஜா சமர்ப்பித்திருந்தார்.

இதேவேளை நான் ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதைக் கட்சி தீர்மானிக்காமல் மக்களே தீர்மானிக்க வேண்டும் என்பதை அறிவிப்போம் என்ற கருத்தை முன்வைத்துக் கலந்துரையாடினேன். எனினும் சஜீத்தை ஆதரிப்பதாகக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் ஆதரித்ததால் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் மாவை சேனாதிராஜா உடல் நலக் குறைவால் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறாக இருந்தாலும் நான் ஜனாதிபதி வேட்பாளர் சஜீத் பிரேமதாசவினது பிரச்சார கூட்டத்திற்குச் செல்லப்போவதும் இல்லை எத்தகைய பிரச்சாரத்தையும் மேற்கொள்ள மாட்டேன் என்றார்.

### இலங்கை தமிழரசுக் கட்சிக்கு நன்றி....

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் இந்த தீர்மானம் தொடர்பாகக் கட்சிக்குள் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

தேர்தலில் போட்டியிட தமிழ் பொது வேட்பாளரை நியமிக்க சில தமிழ் அரசியல் கட்சிகளும், குழுக்களும் எடுத்த தீர்மானத்திற்கு தமிழரசுக் கட்சியின் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் அவருக்கு ஆதரவான சில உறுப்பினர் எதிர்ப்பு வெளியிட்டிருக்கின்றனர்.

எவ்வாறாயினும், தமிழரசு கட்சியில் சுமந்திரனை மையப்படுத்திய சில உறுப்பினர்கள் எடுத்த தீர்மானத்திற்கு சஜித் பிரேமதாச நன்றி கூறியதுடன், 'நாம் அனைவரும் ஒன்றாக, வெற்றிபெறும் எதிர்காலத்தை உருவாக்குவோம்' எனவும் தனது எக்ஸ் தள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவளிக்க முடிவெடுப்பதற்கு முன்னர் இலங்கை தமிழரசு கட்சி, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேறு சில முக்கிய வேட்பாளர்களை சந்தித்திருந்தது. முன்னதாக கடந்த வார இறுதியில் யாழ்ப்பாணம் சென்று மதத் தலைவர்களை சந்தித்திருந்த சஜித், நல்லூர் கோவிலுக்கு விஜயம் வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந்தார்.

எவ்வாறாயினும், நேற்றைய கூட்டத்தில் தமிழரசு கட்சியின் முக்கிய உறுப்பினர்களான நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், சார்லஸ் நிர்மலநாதன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான யோகேஸ்வரன், ஸ்ரீநேசன் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை. இதனிடையே, நேற்று இடம்பெற்ற மத்திய குழு கூட்டத்திற்கு தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என அந்த கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். தனக்கு அழைப்பு விடுக்கப்படாமை குறித்து கட்சியின் செயலாளருக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்சியின் தலைமை இன்றி எடுக்கப்பட்டுள்ள இந்த தீர்மானம் கண்டிக்கத்தக்கது என அந்த கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், கொழும்பு கிளை தலைவருமான சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

### தமிழரசு கட்சியின் மத்திய குழு தீர்மானத்தை ஏற்க முடியாது...

தற்போது லண்டன் சென்றுள்ள அவர், கட்சியின் தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இந்த விடயத்தைக் கூறினார்.

கடந்த காலங்களில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக கருத்துக்களை வெளியிட்டு வந்த சிறீதரன் இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை, கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் மாவட்ட ரீதியாகக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொள்ளாத நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக நல்லூர் உற்சவ நாளில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில், அதனை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா இந்தக் கூட்டத்தில் சுகயீனம் காரணமாகக் கலந்து கொள்ள முடியாது என்று அறிவித்திருந்ததாகவும், சிறீதரன் தமது நிலைப்பாட்டை எழுத்து மூலமாகக் கூட்டத்துக்கு தெரியப்படுத்தி இருந்ததாகவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார். எனவே சிறீதரனின் நிலைப்பாடு உள்ளிட்ட பல விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டே தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்துடன் கட்சித் தலைவர் இல்லாமல் மத்திய செயற்குழு தீர்மானங்களை எடுக்கக்கூடாது என்று கட்சி யாப்பில் இல்லை என்றும், தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான கோரத்தை விட அதிகமான உறுப்பினர்கள் பங்குபற்றி இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் கட்சியின் மத்திய குழு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு மேற்கொண்ட தீர்மானம் சரியானதே என்றும், இந்தத் தீர்மானம் உரிய தரப்பினருக்கு உரிய வகையில் அறிவிக்கப்படும் என்றும் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

### மத்திய குழு தீர்மானத்தை நியாயப்படுத்தும் தமிழரசு ....

எனினும், தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா அதற்கு மறுப்பு தெரிவித்து அது கட்சியின் தீர்மானம் இல்லை என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கட்சியின் செயலாளரை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜா கலந்து கொள்ளவில்லை.

மத்திய குழுத் தீர்மானம் என்பது ஒரு கூட்டுத் தீர்மானம். மத்திய குழுவில் 30 பேர் கலந்து கொண்டார்கள்.

மாவை சேனாதிராஜாவுக்கும் அறிவித்து அவரும் வருவதாக இருந்தார். எனினும், உடல் நிலை சரியில்லை என்று தெரிவித்து அவர் கலந்து கொள்ளவில்லை.

மூத்த துணைத் தலைவர் தலைமையில் தான் கூட்டம் நடைபெற்றது. சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பது மத்திய குழு எடுத்த தீர்மானம்.

அதனையே அறிவித்தோம். எதிர்வரும் நான்காம் திகதி தபால் மூல வாக்களிப்பு. அதனால் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் மூத்த துணைத் தலைவர், மாவை சேனாதிராஜாவை யாழ்ப்பாணத்தில் பேசுவார் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சஜித் பிரேமதாசவை ஆதரிக்க மேற்கொண்ட தீர்மானத்தில் எந்த சிக்கலும் இல்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் கருத்து வெளியிடுகையில், மத்தியகுழு கூட்டத்தில் பங்கேற்க முடியாது என்பதை மாவை சேனாதிராஜா முன்கூட்டியே அறிவித்திருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் கட்சியின் யாப்பின் பிரகாரம் மத்திய செயற்குழு கூட்டத்துக்குத் தேவையான கோரம் இருந்ததாகவும், ஆகையினால், இந்தத் தீர்மானத்தில் எந்த சிக்கலும் இல்லை.

தீர்மானம் ஒன்றை எடுக்கத் தமிழரசுக் கட்சியின் யாப்பின் படி மத்திய செயற்குழு கூட்டத்தில் குறைந்தபட்சம் 11 பேர் இருக்க வேண்டும். நேற்றைய கூட்டத்தில் 26 பேர் இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரிவினை இல்லாது தமிழ்த்தேசியத்திற்கு பலம் சேர்க்க வேண்டும்

## அரியநேத்திரனை ஆதரிக்கும் அடைக்கலநாதன்

இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளை தமிழ் கட்டமைப்பின் சிறந்த முடிவாக பொது வேட்பாளர் அரிய நேத்திரனுக்கு ஆதரவளித்து சங்கு சின்னத்தை தீர்மானித்த முடிவு வரவேற்கத்தக்கது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் காரியாலயத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு




இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரித்த அவர்,

இந்த புரட்சிகரமான முடிவால் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஊடாக அனைவரும் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும். எங்கள் ஒற்றுமை தமிழ் கட்டமைப்பு ஒற்றுமையை காட்டியுள்ளது இதனால் தான் 22 உறுப்பினர்களை பெற்றிருக்கிறோம்.

சங்கு சின்னம் ஊடாக அனைத்து தமிழ் கட்சிகளுக்கும் மற்றும் சிவில் அமைப்புக்களுக்கும் ஒரே குடையின் கீழ் ஒன்றினைத்து மக்களுக்கு பலமான செய்தியை சொல்ல வேண்டும் எங்களுக்குள் பிரிவினை இல்லாது தமிழ் தேசியத்துக்கு அந்த பலத்தை கொண்டு செல்ல வேண்டும்.

பிரிவினைகள் மக்களுக்கு கோபத்தை உண்டு பண்ணும் இதனால் இருக்கின்ற 10 பிரநிதித்துவம் ஐந்தாக குறையலாம். தேர்தலுக்காக அன்றி மக்கள் பிரச்சினைகளை வெளிக்கொணரவும் போராட்டங்களை முன்னெடுக்கவும் கூட்டாக ஆலமரமாக இருக்க வேண்டும். திருகோணமலை மாவட்ட தமிழரசு கட்சியின் முடிவால் கிளிநொச்சி மாவட்ட கட்சி கிளையும் இதே முடிவெடுத்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இதன் போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், தமிழ் கட்சிகள் சிறு சிறு கட்சிகளாக இருக்காமல் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பாக பயணித்து இழந்த உரிமைகளை மீளப் பெறுவோம்.1948ல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது ஆனால் தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படும்!

## ஜனாதிபதியைச் சந்தித்த கிழக்கு மாகாண முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் நம்பிக்கை

**(வி.ரி. சகாதேவராஜா)**

கடந்த பல்லாண்டு காலமாக அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்நோக்கிவரும் இன்னோரன்ன பிரச்சனைகள் ஜனாதிபதி ரணில் காலத்தில் தீர்த்து வைக்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துப் பேசிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபையின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் நம்பிக்கை தெரிவித்தார்.

எதிர்வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் எனது பூரண ஆதரவினை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு வழங்குவதாக முடிவெடுத்துள்ளேன் என்றும் அவர் கூறினார்.

இவர் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் கொழும்பு சென்று சந்தித்து இருந்தார்.

மேலும் தெரிவிக்கையில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் படும் துன்பங்கள் கொஞ்சநஞ்சம் அல்ல தொடர்ச்சியாக எமது மக்களை ஏமாற்றிக்கொண்டு ஒரு சில அரசியல்வாதிகள் தங்களுடைய சுயலாபங்களை அடைந்தவையே மிச்சம். எல்லா மாவட்டங்களிலும் ஒப்பிடும் பொழுது அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேசங்கள் அனைத்தும் பின் தங்கியே காணப்படுகின்றது.எதிர்காலத்தில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை அங்கு வசிக்கின்ற மக்களே ஆள வேண்டும் அவர்களுக்கான சகல விதமான முடிவுகளையும் அவர்களே எடுக்க வேண்டும் எதிர்கால சிந்தனை(எதிர்வர இருக்கின்ற தேர்தல்கள் ) அவ்வாறு இருந்தால் மாத்திரமே இளைஞர்களின் தொழில் வாய்ப்புகளும் சரி அபிவிருத்தியிலும் சரி கொள்கையிலும் சரி எந்தவிதமான குறுக்கீடுகளும் இல்லாமல் சிறந்த முடிவுகள் எட்டப்படும். ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு நமது மக்களுக்கான வாய்ப்பாக நடைபெறுகின்ற ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்துவதை எதிர்பார்க்கின்



றேன் என்றார். இதேவேளை இச் சந்திப்பு தொடர்பாக மு.இராஜேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்,

இந்த சந்திப்பில் ஜனாதிபதியிடம் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பாக பேசியிருந்தேன் . நான் மாகாண சபை உறுப்பினராக இருந்த போது நாவிதன் வெளி சம்மாந்துறை கல்முனை வலய தமிழ் பாடசாலைகளை உள்ளடக்கிய கல்முனை வடக்கு கல்வி வலயம் உருவாக வேண்டிய தன்அவசியம்கருதி பல முன்னெடுப்புக்களை செய்திருந்தேன். அதனை நிவர்த்தி செய்து தரவேண்டும் எனும் கோரிக்கையையும் முன்வைத்தேன். பட்டதாரிகளுக்கு நேரடியாக தொழில் வழங்க வேண்டும். அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில், பொத்துவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி , காரைதீவு பிரதேச தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாகவும் விபரித்திருந்தேன். அதனை ஜனாதிபதி கவனமாக செவிமடுத்து பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவை தொடர்புபடுத்தி வைத்தார்.

அதேவேளை ஜனாதிபதி தேர்தல் முடிந்த பின்னர் நாடாளுமன்ற தேர்தல் , மாகாணசபை தேர்தல்களை எதிர்கொள்ளும் போது தமிழ் கட்சிகள் வாக்குகளை பிரிக்காது அனைவரும் தமிழரசுக்கட்சி உட்பட ஒன்றிணைந்து விட்டுக்கொடுப்புடன் ஒரு சின்னத்தில் போட்டியிட்டு ஆசனங்களை பாதுகாக்க வேண்டும்.

நான் மாகாணசபை உறுப்பினராக இருந்த போது முடிந்தவரை பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை செய்துள்ளேன், ஆனால் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கான தேவைகள் ,பிரச்சனைகள், அபிவிருத்திகளுக்கு தற்போதுவரை தீர்வின்றியே உள்ளன. ஜனாதிபதியுடனான சந்திப்பில் பல விடயங்களை விபரித்திருந்தேன் சாதகமான பதிலை தந்தார் என்றார்.

# நாவிதன்வெளி பிரதேசத்தில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு









**(வி.ரி.சகாதேவராஜா)**

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி பிரதேசத்தில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைகளமும், காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடாத்திய முதல் நிகழ்வு நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி சூரியகுமார் பிரசாந்தினி தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டதுடன் நாவிதன்வெளி பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. நீலோந்திரன்,திணைக்கள வளவாளர் நா. சனாதனன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப்படங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திரு கு. ஜெயராஜி ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

# மட்டக்களப்பு கன்னங்குடா மகா வித்தியாலயத்தின் 135 வது ஆண்டு விழா !











மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள கன்னங்குடா மகா வித்தியாலயத்தின் 135 வது ஆண்டு விழா ஞாயிற்றுக் கிழமை 01 ம் திகதி மிக கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வியிலும் விளையாட்டுக்களிலும் சாதனை படைத்து வரும் கன்னன்குடா மகா வித்தியாலயத்தின் 135 வது பாடசாலை தினத்தை முன்னிட்டு நடைபவனி ஒன்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெற்றது.

பாடசாலையின் அதிபர் தங்கராசா கரிகாலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் பாடசாலை தினத்தை நினைவு கூறும் வகையில் 135 வது ஆண்டு விழா கேக் வெட்டப்பட்டு, அதனைத் தொடர்ந்து நடை பவனியானது ஆரம்பமாகியது.

இந்நடைபவனி கன்னங்குடா ஊர் ஊடாக சென்று தொடர்ந்து மண்டபத்தடி வழியாக கரையாக்கந்தீவு, தாண்டியடி, படுத்திச்சேனை , குறிஞ்சாமுனை சென்று மீண்டும் கன்னங்குடா பாடசாலையை வந்தடைந்தது.

இதன் போது பாடசாலை மாணவர்கள் பழைய மாணவர்கள் ஆசிரியர்கள், பாடசாலை நலன் சாரஎந்த அமைப்புக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இந்நடைபவனியில் போதைப்பொருள் ஒழிப்பு சம்மந்தமாகவும் சுற்றாடல் பாதுகாப்பு, கலை கலாசாரம், கல்வி, சுகாதாரம் போன்றவற்றை பற்றி விழிப்புணர்வூட்டும் பதாதைகள் மாணவர்களால் கொண்டு செல்லப்பட்டதுடன், கலை கலாசார நிகழ்வுகளை பிரதிபலிக்கும் மாணவர்களின் ஆடல் பாடல்களுடன் இடம் பெற்ற இந் நடைபவனியில் வாகன பேரணியும் இடம் பெற்றிருந்தது..

பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக இடம் பெற்ற பாடசாலை தின நடைபவனியில் பாடசாலையின் வளர்ச்சிக்காக பாடுபட்ட அதிபர்கள் மற்றும் கொடையாளிகள் உள்ளிட்டோரின் உருவப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இதே தினம் பாடசாலை மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வும் இடம் பெற்றது .

# பாவலர்மணி திருமதி. சரளா விமல்ராசாவின் நான்கு மரபுக்கவிதை நூல்கள் வெளியீடு






**ஆலையடிவேம்பு நிருபர் வி.சுகிர்தகுமார்**

சித்தானைக்குட்டி சுவாமிகளின் ஆசிர்வாதத்தினை பெற்ற அம்பாரை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பனங்காட்டு மண்ணில் பிறந்து 30 வருடகாலமாக சுவிற்சலாந்து நாட்டில் வாழ்ந்துவரும் சமூக சேவையாளரும், தமிழ் கலை இலக்கியவாதியுமான பாவலர் மணி திருமதி. சரளா விமல்ராசாவின் நான்கு மரபுக்கவிதை நூல்கள் நேற்று 31ஆம் திகதி அவரது தாய் மண்ணான அக்கரைப்பற்று "சுவாமி விபுலாந்தா சிறுவர் இல்லம்" மண்டபத்தில் மிகவும் பிரமாண்ட முறையில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றம் மற்றும் பிரான்ஸ் கம்பன் கழகம் இணைந்து இறைபணிச்செம்மல் த.கயிலாயபிள்ளை தலைமையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களின் பிரதிநிதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்வழங்கல் போக்குவரத்து கிராம அபிவிருத்தி உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம் கலந்து கொண்டதுடன் விசேட அதிதிகளாக அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.அதிசயராஜ் தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதி எஸ்.குணபாலன் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் அனுசியா சேனாதிராஜா உலகத்தமிழ் கலை இலக்கிய மற்றும் பண்பாட்டு பேரவையின் இலங்கைக்கான தலைவர் சு.சிவபாலன் உள்ளிட்ட கல்வி அதிகாரிகள் கவிஞர்கள் சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

பாவலர்மணி திருமதி. சரளா விமல்ராஜ் பல நூல்களை இதுவரையில் வெளியிட்டிருந்தாலும் இவ்வாறு நான்கு மரபுக்கவிதை நூற்களையும் தொகுத்தாக்கி தனது தாயார் அமராவதியின் 80ஆவது பிறந்த தினத்தில் இலங்கையில் ஒரே நாளில்; வெளியிடுவது என்பது இதுவே முதல் முறை.

இவ்வாறு அவரால்; தமிழர் பண்பாட்டிலக்கியம் கமழும் "விருத்தமாயிரம்" தன் மண்ணைப் புகழ்பாடும் "பனங்காட்டு அந்தாதி" குருவிற்கு மரியாதை செய்யும் "பாட்டரசர் புகழ் கலி விருத்தம்" சிந்தை மகிழும் "சிந்து பாடுவோம்" ஆகிய நான்கு பெறுமதிமிக்க நூல்கள் பிரதம அதிதியால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

பின்னர் முதல் பிரதி கலாநிதி கோபாலரெத்தினம் அவர்களுக்கு வழங்கப்பட்டதுடன் ஏனைய அதிதிகளுக்கும் வழங்கப்பட்டது. இதேநேரம் நூலாசிரியர் உலகத்தமிழ் கலை இலக்கிய மற்றும் பண்பாட்டு பேரவையின் இலங்கை கிளையினரால் கௌரவிக்கப்பட்டதுடன் அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றத்தினரால் பாசுகவி எனும் பட்டம் வழங்கி பெருமைப்படுத்தப்பட்டார்.

நூல் அறிமுக உரையினை கவிஞர் க.யோகானந்தம் வழங்க ஆய்வுரைகளையும் வாழ்த்துரைகளையும் சாமஸ்ரீ ஏ.எல்.கிதுர்முகமட் மற்றும் பொன் லோகநாதன் கவிஞர் தம்பிலவில் ஜெகா பாவேந்தல் பாலமுனை பாறுக் ஓய்வு நிலை அதிபர் மு.கருணாநிதி ஓய்வு நிலை விரிவுரையாளர் நா.செல்வநாதன் ஓய்வு நிலை ஆசிரியர் சா.புண்ணியமூர்த்தி வழங்க நன்றியுரையை இந்து இளைஞர் மன்ற உபதலைவர் க.கிருஸ்ணமூர்த்தி கூறினார்.

நிகழ்வில் நூலாசிரியரின் தாயார் கௌரவிக்கப்பட்டதுடன் அவரது நண்பர்கள் குழாமினராலும் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில் ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களின் வாழ்த்துச் செய்;தியினை செயலாளர் கலாநிதி கோபாலரெத்தினம் வாசித்ததுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் ஆகியோராலும் பாராட்டப்பட்டார்.

இரத்தத்தில் ஊற்றெடுத்த கலை இலக்கியவாதியான பாவலர்மணி திருமதி. சரளா விமல்ராஜ் அவர்கள் இதற்கு முன்னரும் பல வரலாற்றுச் சிறப்புமிக்க நூல்களை வெளியிட்டு வெளிநாடுகளிலும் தன் திறமையினை நிரூபித்து பாராட்டுகளைப் பெற்று இலங்கைத் தமிழர்களுக்கு பெருமை சேர்த்தவர்.

அத்தோடு வெளிநாடுகளில் வழங்கப்படும் பல விருதுகளுக்கும் இவர் சொந்தக்காரர் என்பது நம் நாட்டிற்கும் பிறந்த மண்ணிற்கும் புகழை தேடி தருகின்றது.

கலை இலக்கிய ஆர்வலர் மட்டுமல்லாது தனது சொந்த செலவில் பல சமூகசேவைகளையும் செய்துவரும் இவர் "உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப்பேரவை"யின் சுவிற்சலாந் நாட்டுக் கிளையின் தலைவருமாக செயலாற்றி வருகின்றார்.

புலம்பெயர்ந்து சுவிஸ்நாட்டில் கணவருடன் வாழ்ந்து அந்த நாட்டிலேயே கணவரை இழந்து பெண்ணொருவராக தனித்து நின்று தன் பிள்ளைகளுக்கு கல்வி ஊட்டி சமூகத்தில் நற்பிரஜைகளாக வளர்த்தெடுத்ததோடு நின்று விடாமல் அதன் பின்னராக பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்து தளராத முயற்சி சிறப்பான சிந்தனையுடன் கலை இலக்கியத்தில் நுழைந்து இப்படிப்பட்ட சமய சமூக பணிகளையும் துணிந்து முன்னெடுப்பது பாராட்டப்பட வேண்டியதே!

# தேசிய மக்கள் சக்தி- சாய்ந்தமருது பிரதேச கல்வியியலாளர்கள் சந்திப்பு






**பாறுக் ஷிஹான்**

ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திசாநாயக்கவை ஆதரித்து "நாடு அனுரவோடு" எனும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் கொள்கை விளக்க சாய்ந்தமருது பிரதேச கல்வியியலாளர்கள் சந்திப்பு மாளிகைக்காடு தனியார் வரவேற்பு மண்டபத்தில் ஞாயிறு (01) நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் அம்பாரை மாவட்ட செயற்குழு உறுப்பினரும் கல்முனை தொகுதி அமைப்பாளருமான ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில், தேசிய மக்கள் சக்தியின் விவசாய கொள்கையின் திட்டமிடலுக்கான உபகுழுவின் ஒருங்கிணைப்பாளரும் தேசிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகள் அமைப்பின் குழு உறுப்பினருமான ஜீ.வி. எச். கோட்டாபய, தேசிய மக்கள் சக்தியின் அம்பாரை மாவட்ட செயற்குழு உறுப்பினரும் அம்பாறை நகரசபை முன்னாள் உறுப்பினருமான இந்திக்க விஜயவிக்கிரம ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதன்போது, சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த கல்வியியலாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களின் அமைப்பாளர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# முருகேசு சந்திரகுமாரின் ஆதரவும் சஜித்துக்கு!



முன்னாள் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துக் கட்சியின் பொதுச் செயலாளருமான திரு.முருகேசு சந்திரகுமார அவர்கள் 2024 ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச மற்றும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் மு.சந்திரகுமார் ஆகியோர் இடையே இ(02) சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பையடுத்து இது தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ முருகேசு சந்திரகுமார் இந்த அறிவிப்பை விடுத்தார்.

1994-2000 மற்றும் 2010-2015 காலகட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றியுள்ள இவர், தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து, பாராளுமன்ற தெரிவுக் குழுக்களில் பிரதித் தலைவராகவும் பணியாற்றி அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியுமாவார். 2020 பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகி சுயேச்சையாகப் போட்டியிட்டார்.

**வடக்கு அபிவிருத்திக்கு**
**ஜனாதிபதி செயலணி.**
**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.**

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரம், அபிவிருத்தி, மற்றும் பிரதேச பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வட பிரதேசத்திற்காக தனியான ஜனாதிபதி செயலணி ஒன்றும் நிறுவப்படும். ஏனைய பிரதேசங்களுக்கும் மாகாண அடிப்படையில் செயலணிகள் அமைக்கப்படும். இந்த வேலை திட்டத்தின் ஊடாக யாழ் தேர்தல் மாவட்டத்தில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களுக்கு இரண்டு உப செயலணிகளும் அமைக்கப்பட்டு, மாதாந்த வடக்கின் அபிவிருத்தி தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பெண்களை தலைமையாகக் கொண்ட அதிக குடும்பங்கள் காணப்படுவதோடு, அவர்கள் நுண் நிதி கடன் பொறிக்குள் சிக்கி இருக்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இதுவரை எந்த தீர்வும் இல்லை. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அதிகமான குடும்பங்கள் காணப்படுகின்றன. தானும் இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்ப உறுப்பினர் என்ற அடிப்படையில், யுத்தத்துக்கு பின்னரான இந்தப் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்துவேன். இளைஞர் யுதிகளின் பிரச்சினைகள் உட்பட தொழில் இல்லா பிரச்சினைக்கும் தீர்வினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன் போது தெரிவித்தார்.

வடகிழக்கு மக்களை பாதுகாக்கும் வகையிலான முற்போக்கான பல வேலைத் திட்டங்களை முன்னெடுப்போம். ஒரே நாட்டுக்குள் அதிகார பகிர்வை மேற்கொண்டு, 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதோடு, மாகாண சபைகளுக்கு காணப்படுகின்ற அதிகாரங்களை மத்திய அரசாங்கம் பறித்துக் கொள்கின்ற செயற்பாட்டிற்கு இடமளிக்காது, குறுகிய காலத்திற்குள் மாகாண சபை தேர்தலை நடத்தைவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மேலும் நன்னீர் மீன் பிடி, கரைவலை மீன்பிடி உள்ளிட்ட பல கைத்தொழில் வாய்ப்புக்களின் ஊடாக அபிவிருத்தியை நோக்கி செல்ல முடியும். இதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதோடு, இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக மாற்ற நடவடிக்கை எடுப்பேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது தெரிவித்தார்.

# ரணிலின் சில்லறைச் சொகுசுகளால் சமூகங்களின் பிரச்சினைகள் தீராது; ஆறு தடவைகள் பிரதமராக இருந்தும் செல்லாக்காசானவர்

அதிகாரப்பகிர்வு, சமூகங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை, ஆட்சியைக் கைப்பற்றிய அடுத்த கணமே வழங்குவதற்கான வாய்ப்பு ஏற்படுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்,

மன்னாரில் (31) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விளக்கமளித்த அவர் தெரிவித்ததாவது,

""சிறுபான்மைச் சமூகங்களின் அமோக ஆதரவுடன் சஜித் பிரேமதாசவை வெல்லவைக்க வேண்டும். மன்னார், வவுனியா மாவட்டங்களிலுள்ள சகல சமூகங்களதும் தெரிவாக சஜித் பிரேமதாச இருப்பார்.

விவசாயிகள், மீனவர்கள் மற்றும் நாளாந்த தொழிலாளர்கள் வாழும் இந்தப் பிரதேசத்தில் பல பிரச்சினைகள் உள்ளன. அயல்நாட்டு மீனவர்களின் அத்துமீறல்களால் அதிகம்



பாதிக்கப்படுவது மன்னார் மாவட்டமே. இது குறித்து, எமது வேட்பாளர் சஜித்திடம் விளக்கியுள்ளோம். அவரது ஆட்சியில் இதற்கு தீர்வு கிடைக்கும்.

இம்மாதம் (03) காலையில் வவுனியா மாவட்டத்துக்கும் மாலையில் மன்னார் மாவட்டத்துக்கும் சஜித் பிரேமதாச வரவுள்ளார். அணிதிரண்டு அவரை ஆதரிக்க வாருங்கள். ஆறு தடவைகள் பிரதமராக இருந்தவர் ரணில் விக்ரமசிங்க. எமது மக்களின் பிரச்சினைகள் எவற்றையும் அவர் தீர்க்கவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை தந்திரமாக இழுத்தடித்தார்.

சமூகப் பிரச்சினைகளை சில்லறைக்காசுச் சொகுசுகளால் தீர்க்கவே முடியாது. வாக்குகளில்லாத சிலர் அவரவர் வாய்ப்புகளுக்காகவே ரணிலை ஆதரிக்கின்றனர். விரட்டியடிக்கப்பட்ட கோட்டாவின் எஞ்சிய கால ஆட்சியை, எச்சில் ஆசைகளுக்காகப் பயன்படுத்துவோரை ஆட்சியிலிருந்து விரட்டுவோம்.

பரந்தும் விரிந்தும் கிடக்கும் வடமாகாண பூமியில், சுற்றுலாத் தளங்களை உருவாக்கி, வாழ்வாதரத்தைப் பலப்படுத்த சஜித் பிரேமதாசவைப் பலப்படுத்துங்கள்"" என்று குறிப்பிட்டார்.









வேல்ட் விஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடகிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் உல்ல S4T, SNP, கல பயிற்றுனர்கலுக்கான Gift தொடர்பான மூன்று நாள் வதி விட பயிற்சி பட்டரை செங்கலடி சத்துருக்கொண்டான் சர்வோதய மண்டபத்தில் வேல்ட் விஷன் தேசிய காரியாலயத்தின் நிகழ்ச்சி திட்ட பொறுப்பாளர் திரு. ஞானம் தலைமையில் இடம் பெற்றதை காணலாம். படம்: அட்டன் ரஜினி

# மட்டக்களப்பு - திருகோணமலை தங்கங்களின் 29 வது வருடாந்த கிறிக்கட் சமர் சம்பியனானது மட்டக்களப்பு சிவானந்தா







(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி 29 வது தடவையாக ஒழுங்கு செய்திருந்த திருகோணமலை ஆர்.கே. எம்.ஸ்ரீகோணேஸ்வரா இந்து கல்லூரிக்கும், மட்டக்களப்பு ,கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரிக்கும் இடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிறிக்கட் சமர் கடந்த 31 ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பாடிய திருகோணமலை அணி 32.5 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 13.4 ஓவர்களில் 2 விக்கட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

திருகோணமலை இந்து கல்லூரி அதிபர் எஸ்.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி சமரில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் கே.சிவகுமார் பிரதம அதிதியாகவும், திருகோணமலை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.பரமேஸ்வரன் கௌரவ அதிதியாகவும்,சிறுவர் கல்வி உதவிகள் அம்ப்பின் சர்வதேச இணைப்பாளர் எஸ்.கங்காதரன் மற்றும் கனடா இஉ¤ கிங் குறூப் பணிப்பாளர் பெஞ்சமின் லோரன் சுப்பிள்ளை ,மட்டக்களப்பு சிவானந்தாகல்லூரி அதிபர் எஸ்.தயாபரன் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்

சிறந்த துடுப்பாட்ட வீரராக மட்டக்களப்பு அணியைச் சேர்ந்த துவாதரன், சிறந்த பந்து வீச்சாளராகவும், ,சிறப்பாட்டக்காரராகவும் மட்டக்களப்பு சிவானந்தா அணித்தலைவர் நிரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# தமிழரசுக் கட்சிக்கு மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள்

## கருணாகரம் எம்.பி. தெரிவிப்பு

(சுமன்)

தமிழரசின் மத்தியகுழு சஜித் பிறேமதாசா அவர்களை ஆதரிப்பதென்ற முடிவு எடுத்துள்ளதாக அறிவித்துள்ளமை தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயத்தை சற்று பாதிப்புறச்செய்தாலும் மக்கள் அதற்குரிய பதிலை வழங்குவர்கள். இந்;த வாரம் ஜனாதிபதித் தேர்தலுக்குரிய தபால் மூல வாக்களிப்பு வாரமாக இருக்கின்றது. எனவே தபால் மூல தமிழ் வாக்காளர்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்திலே உறுதியாக இருந்து சங்குச் சின்னத்திற்கு வாக்களித்து எமது ஒற்றுமையினைக் காட்ட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21ம் திகதி நடைபெற இருக்கின்றது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை கொண்டு வரப்பட்டு இது 09வது ஜனாதிபதித் தேர்தல். கடந்த எட்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும் அறுவர் ஜனாதிபதிகளாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களில் எமது ஆதரவோடு வந்தவர்களும் இருக்கின்றார்கள், எமது ஆதரவில்லாமல் வந்தவர்களும் இருக்கின்றார்கள்.

அந்த வகையில் வருகை தந்தவர்கள் அனைவரும் இந்த நாட்டில் தமிழ் மக்களைத் தொடர்ச்சியாக இரண்டாந்தரப் பிரஜைகளாகவே நடத்திக் கொண்டு வந்தவர்கள். புறையோடிப்போயுள்ள இனப் பிரச்சனைக்கு எவருமே நிரந்தரத் தீர்வைத் தரவில்லை என்ற காரணத்தினால் இந்த முறை ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நாங்கள் நிறுத்த வேண்டும். எங்களுடைய மக்களது புறையோடிப்போயுள்ள இனப்பிரச்சனைக்கான தீர்வு இன்னும் கிடைக்கவில்லை என்பதை நாங்கள் ஒறறுமையாக நிரூபித்துக் காட்ட வேண்டும். அது மட்டுமல்லாது 2009இன் பின்னர் தமிழ்க் கட்சிகள் சிதறுண்ட நிலையிலே எமது அரசியல் பயணத்தைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பொது வேட்பாளரை



அடையாளமாக வைத்து 2001லே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகியது போன்று ஒரு பலமான கூட்டணியை உருவாக்கி தமிழ்த் தேசியப் பரப்பிலே பலமானதொரு குரல் ஒன்றாக 2004லே 22 உறுப்பினர்களை வைத்திருந்ததைப் போல் பலமாகக் கொண்டு வர வேண்டும் என்ற காரணத்தை மையப்படுத்தி தமிழ்ப் பொது வேட்பாளரை இறக்கியிருக்கின்றோம்.

அது மாத்திரமல்ல இந்த 09வது ஜனாதிபத் தேர்தலென்பது இலங்கையில் ஒரு மாறுபட்ட தேர்தலாக இருக்கின்றது. கடந்த எட்டு தேர்தல்களுமே இருமுனைப் போட்டிகளாகவே இருந்தன. ஆனால் தற்போது 39 வேட்பாளர் இந்த ஜனாதிபதித் தேர்தலில் இருந்தாலும் பிரதானமாக வெல்லக் கூடிய வேட்பாளர்களாக மூன்று பேர் இருக்கின்றனர். அந்த அடிப்படையில் இந்தத் தேர்தல் மும்முனைப் போட்டியாக இருக்கின்றது. இந்த நிலையில் நாங்கள் ஒரு பலமான அணியாக உருவாகினால் எங்களது வாக்குகள் அவர்களுக்கு நிச்சயமாக 50 வீதத்தைத் தாண்டுவதற்குத் தேவைப்படும். எங்களது வாக்குகள் இல்லாமல் எவருமே இந்தத் தேர்தலில் 50 வீதத்தைத் தாண்டுவதற்குரிய வாய்ப்புகள் இருக்காது. இந்த வேளையில் நாங்கள் பலமான ஓரணியாக இருப்போமானால் எங்களைத் தேடி அந்த வேட்பாளர்கள் வரும்போது நாங்கள் எங்களுடைய ஆகக் கூடிய கோரிக்கையை முன்வைத்து அதனை நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருந்தது.

ஆனால் தற்போதும் அந்தச் சந்தர்ப்பம் இல்லாமல் இல்லை. இருந்தும் இந்;த வாரம் ஜனாதிபதித் தேர்தலுக்குரிய தபால் மூல வாக்களிப்பு வாரமாக இருக்கின்றது. எனவே நாங்கள் தமிழ் மக்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்திலே உறுதியாக இருந்து சங்குச் சின்னத்திற்கு வாக்களிப்பதற்குத் தயாராக வேண்டும்.

சங்குச் சின்னத்திற்கு வாக்களிப்பதிலே கூடுதலான அக்கறை எங்களுடைய தபால் மூல வாக்காளர்கள் காட்டுகின்ற போது அதையொட்டியதாகவே பொது வாக்கெடுப்பும் அமையும் என இந்த ஜனாதிபதி வேட்பாளர்கள் நினைப்பதற்கு வழி செய்வோமானால் எங்களை அவர்கள் நாடி வரும் சந்தர்;ப்பம் அதிகமாக இருக்கும். எனவே எமது தபால் மூல வாக்காளர் தங்கள் வாக்குகளை சங்குச் சின்னத்திற்கு வழங்கி எமது ஒற்றுமையினைக் காட்ட வேண்டும் என வினயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

பொது வேட்பாளர் என்ற விடயம் ஆரம்பிக்கும் போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஒரு முடிவினை எடுத்திருந்தோம். எமது கருத்துக்களின் அடிப்படையில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். இந்த விடயம் வெற்றியளிக்க வேண்டுமாயின் தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக இதில் இணைந்து வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டோம். இந்த விடயத்தை சிவில் சமூக மட்ட அமைப்புகளும் ஏற்றுக்கொண்டு எங்களுடன் இணைந்திருந்தார்கள். அந்த நேரத்திலே இவ்வமைப்புகள் எமது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஒரு உத்தரவாதத்தை அளித்திருந்தார்கள். இந்தப் பொது வேட்பாளர் என்ற விடயத்திற்குள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினை நாங்கள் அழைத்து வருவோம் என்று கூறியிருந்தார்கள். ஆனால் இறுதியிலே தமிழரசுக் கட்சிக்குள் இரண்ட வேறுபட்ட கருத்துகள் வெளிக் கொணரப்பட்டன. இருந்தாலும் நேற்றைய தினம் நடைபெற்ற தமிழரசின் மத்தியகுழுக் கூட்டத்திலே சஜித் பிறேமதாசா அவர்களை ஆதரிப்பதென்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது உண்மையிலேயே இந்தத் தமிழ் பொது வேட்பாளர் என்கின்ற விடயத்தை சற்று பாதிப்படைய வைக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை என்றாலும், அவர்களின் முடிவு மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படும் போது மக்கள் அதற்குரிய பதிலை வழங்குவர்கள் என்று தெரிவித்தார்.

# எங்களை அழிப்பதற்கு சிங்களவர்கள் தேவையில்லை; எங்களது தலைவர்களே போதும்

## அன்னராசா சீற்றம்!

தமிழரசு கட்சியானது ஞாயிற்றுக்கிழமை (01) கூடி வவுனியாவில் முடிவு எடுத்ததன் அடிப்படையில், தமிழரசு கட்சியானது ஒற்றுமை இல்லாமல் தமிழர்களை பிரிவுக்கும் அல்லது தமிழர் இந்த நிலைக்கு போவதற்கும் காரணமாக இருக்கின்றது என வடக்கு மாகாண மீனவ அமைப்பின் பிரதிநிதியான அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வவுனியாவில் நிறைவேற்றப்பட்ட தமிழரசு கட்சியின் தீர்மானம் குறித்து, சமூகமட்ட பொது அமைப்பின் பிரதிநிதி என்ற வகையில் அவரிடம் இதுகுறித்து கருத்து வினவியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு இன்று வரைக்கும் தமிழரசுக் கட்சி தமிழருடைய உரிமைகளை மீட்பதற்கு உளரீதியாக செயல்படவில்லை. வாய் ரீதியாக மக்களுக்கு ஒன்றை சொல்வதும் அரசாங்கத்திற்கு ஒன்றை சொல்வதுமாக இருக்கின்றது.

ஒட்டுமொத்த கட்சியாக இந்த முடிவை எடுத்திருந்தால் நாங்கள் வரவேற்றிருப்போம். ஆனால் கட்சியின் தலைவர் ஒன்றினை கூறுகின்றார், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஒன்றினை கூறுகின்றார், பல உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளவில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் தமிழ் மக்களின் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் குலைப்பதற்கான



அடித்தளமாகத் தான் நாங்கள் இதனை பார்க்கின்றோம். தமிழரசு கட்சியை எடுத்து பார்ப்போமேயானால் சிவஞானம் சிறீதரன், குகதாசன் ஆகியோர் உட்பட்ட கிளிநொச்சி மற்றும் திருகோணமலை கிளைகளினால் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் அதனை எதிர்க்கின்றனர். இவ்வாறு இருந்தால் தமிழர்களுடைய நிலை என்ன?

தமிழர்களை கூறு போட்டு, தமிழர்களுடைய இருப்புகளை அழிப்பதற்கு ரணிலோ, சஜித்தோ, அனுரவோ அல்லது நாமல் ராஜபக்சவோ தேவையில்லை, எமது கட்சித் தலைவர்களே போதும்.

தமிழ் சிவில் சமூகமாக நாங்கள் எடுத்த பொது வேட்பாளர் என்ற முயற்சியை ஆதரித்து, எதிர்காலத்தில் இவ்வாறான புல்லுருவிகளையும், முண்டு கொடுப்பவர்களையும் நிராகரிப்பதற்கு நாங்கள் தமிழர் சமூகமாக ஒன்றுபட வேண்டும்.

வாக்குப் போடுவது மக்களாகிய நாங்கள். ஆனால் இவர்கள் எப்போது மக்களை சந்தித்து, மக்களது கருத்துக்களை கேட்டு தீர்மானம் எடுத்தார்கள்? ஆகவே இவர்கள் மக்களது பிரதிநிதிகள் என்று கூறி எவ்வாறு சர்வதேச சமூகங்களிடம் பேசப் போகின்றார்கள்?

வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் கூட்டமானது பிரிவினையை காட்டுகின்றது. எனவே மக்களே நீங்கள் இந்த தமிழரசுக் கட்சியை நம்பாதீர்கள். நாங்கள் சுயமாக சிந்தித்து, எங்களுக்கு இருக்கின்ற வாக்குரிமை பலத்தினால் ஒன்றிணைந்து செயற்படுவோம். எமது கட்டமைப்புக்குள் வருமாறு நாங்கள் இலங்கை தமிழரசுக் கட்சியையும் அழைக்கின்றோம்.

தங்களுடைய சுயலாபத்துக்காகவும், தங்களது மதுபான நிலைய அனுமதிப் பத்திரத்துக்காகவும், தாங்கள் கோடிகளை சம்பாதிப்பதற்காகவும் தமிழ்மக்களை எதிர்காலத்தில் விற்றுப் பிழைப்பது சாத்தியமற்றது. 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் அது வெளிச்சத்துக்கு வரும். அப்பொழுது இந்த அரசியல் காட்சிகளும், பேரம் பேசுபவர்களும் புரிந்து கொள்வார்கள்.

எனவேதான் நாங்கள் கூறுகின்றோம். இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு சங்கு சின்னத்திற்கு வாக்களிப்போம், எமது ஒற்றுமை நிலைநாட்டுவோம் அதுவே எமக்கான தீர்வு என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தல் 2024



மில்லியன் கணக்கில் வாக்குகளை
பெற்று வெற்றிபெற
மில்லியன் கணக்கில்
வாக்காளர், பார்வையாளர்களைக்
கொண்ட சுபீட்சம் ஊடகத்தில்
குறைந்த விலையில்
விளம்பரங்களை வெளியிடுங்கள்

077 664 5232 / 077 311 2601